3. தகவல் கோரல்

(அ) துறைமுகம் தொகுதி, கிளைவ் பேட்டரி, V.R. Garden உள்ளிட்ட பகுதிகளில் சிதிலமடைந்த குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளுக்கு மாற்றாக புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. ஆளுநர் உரையின் மீதான விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கவன ஈர்ப்புத் தீர்மானங்களை, சிறப்புக் கவன ஈர்ப்பாக நான் எடுத்துக் கொண்டேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக, ஆளுநர் உரையின் மீதான விவாதத்தின்போது கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் என்னிடம் அதிகளவில் கோரிக்கை வைத்ததன் காரணமாக சிலவற்றை நான் அனுமதிக்கலாமென்று இருக்கிறேன். ஆனால், அதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வியைச் சுருக்கமாகக் கேட்டால், மேலும் சில உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கும். மாண்புமிகு உறுப்பினர்கள் சுருக்கமாகக் கேட்கவில்லையென்றால், விரிவான முறையில் கேள்வி கேட்டால் வாய்ப்பு கிடைக்காது. (குறுக்கீடுகள்) அனைவரும் சுருக்கமாகப் பேசும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

***திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். புறமுதுகை புறந்தள்ளுகின்ற எங்கள் போராளி தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

கடந்த 1–9–2016 ஆம் தேதியன்று இதே அவையில், கிளைவ் பேட்டரி, V.R. Garden, *கல்யாணபுரம், எல்லீஸ் நகர் ஆகிய திட்டப் பகுதிகளில் இருக்கின்ற குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் சிதிலமடைந்திருக்கின்ற நிலையை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். கல்யாணபுரம் பகுதியில்*

[திரு. பி.கே. சேகர்பாபு] [2019 ஜனவரி 7

PMAY திட்டத்தின்கீழ் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. அதில் 390 வீடுகள் கட்டப்படுவதாகவும் அறிகிறேன். அந்தப் பகுதி இடநெருக்கடி மிகுந்தது. 14 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கொண்ட குடியிருப்புகள் கட்டப்படுவதால் மேலும் இடநெருக்கடி ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. குறைந்தபட்சம் 8 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டினால்தான் அந்தப் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் அமையும். அதுமட்டுமல்லாமல் புதிதாக வீடுகள் கட்டப்படும்போது அவர்கள் வசிப்பதற்கு மாற்று இடங்கள் வழங்கப்படாததால், வாடகை அதிகமாகக் கொடுத்து ஓராண்டு, ஈராண்டு என்று வேறு இடங்களில் குடியேற வேண்டிய நிலைமை இருக்கிறது. குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக 8,000 ரூபாய் மட்டும்தான் அதற்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது. கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கையையும் வைக்கிறேன்.

அதேபோல் 2016, 2017 மற்றும் 2018 ஆகிய மூன்றாண்டுகளில் சாலையோரங்களில் வசிக்கின்ற மக்களுக்கு மாற்றுத் திட்டப் பகுதியில், பெரும்பாக்கம் பகுதியில் குடியிருப்புகள் ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்தேன். அன்றையதினம் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்த மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு, பட்டியல் தந்தால், உடனடியாகக் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படும் என்று தெரிவித்தார். மாநகராட்சி சார்பாக பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. இன்னும் அவர்களுக்கு குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. மொத்தமே 1,500 குடியிருப்புகள்தான். பெரும்பாக்கம் பகுதியில் 3,500 குடியிருப்புகள் காலியாகவுள்ளன. அந்தச் சாலையோரங்களில் இருக்கின்ற மக்கள் மார்கழி மாதம் குளிருக்கும், கத்திரி வெயிலுக்கும்படுகின்ற இன்னல்கள் அதிகம். தலைமுறை கடந்து தங்களது அன்றாட வாழ்க்கையை, காலை கழிப்பிடம் முதல் இரவில் உறங்கும் வரையில் அனுதினமும் சாலையோரங்களிலேயே தங்களுடைய வாழ்க்கையைக் கழித்து கொண்டு வருகிறார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த கல்நார் வீடு கட்டும் திட்டம் இன்றைக்கு தடை செய்யப்பட்டுள்ளது. பெரும்பாக்கத்தில் இருக்கின்ற 3,500 குடியிருப்புகளில் 1,500 குடியிருப்புகளை அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுவதற்காக ஒதுக்கீடு செய்து கொடுத்தால், சாலையோரங்களில் வசிக்கின்ற மக்களுடைய

2019 ஜனவரி 7] [திரு. பி.கே. சேகர்பாபு]

வாழ்வாதாரம் உயர்வடையும். கிளைவ் பேட்டரி பகுதியிலிருந்து தற்போது மண் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கும் கூடியவிரைவில் கட்டித் தர வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறேன். V.R. Garden பகுதியில் இருக்கின்ற 184 குடியிருப்புகளும் காமராஜர் காலத்தில் கட்டப்பட்டவை. அவை தற்போது பழுதடைந்துள்ளன. அங்கும், PMAY திட்டத்தின் மூலமாக குடியிருப்புகளைக் கட்டித் தந்தால், அந்தப் பகுதி மக்களுடைய வாழ்வாதாரம் மேம்படும் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடம் என்னுடைய கோரிக்கைகளை வைக்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் இங்கே சில பிரச்சினைகளை சபையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். சென்னை யானைக் கவுனி பாலம் மற்றும் வால்டாக்ஸ் சாலை சந்திக்கும் இடத்தில் உள்ள கல்யாணபுரம் திட்டப் பகுதியில் 260 அடுக்குமாடிக் குடியிருப்புகள் தரை மற்றும் மூன்றடுக்கு மாடி அமைப்பில் 8 கட்டட தொகுதிகளில் 1976 ஆம் ஆண்டு கட்டப்பட்டன. இக்குடியிருப்பில் உள்ள வீட்டின் பரப்பு 326 சதுர அடி ஆகும். இந்தக் குடியிருப்புகள் கட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்ட காரணத்தால் அவை தற்போது வசிக்க ஏற்ற வகையில் இல்லை என்பதை குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் தொழில்நுட்பக் குழு பார்வையிட்டு, அவற்றை இடித்துவிட்டு புதியதாக அவ்விடத்தில் குடியிருப்புகள் கட்ட சமீபத்தில் பரிந்துரைத்துள்ளது.*

இதனடிப்படையில், மறுகட்டுமான திட்டத்தின்கீழ் இங்கு 360 அடுக்குமாடிக் குடியிருப்புகள், அதாவது 260 குடியிருப்புகளுக்குப் பதிலாக 100 குடியிருப்புகள் அதிகமாகக் கொண்ட 360 அடுக்குமாடிக் குடியிருப்புகள்–இரண்டு கட்டடத் தொகுதிகளாக (Two Blocks) *கட்ட திட்டமிடப்பட்டது. முதல் தொகுதியில் ஒரு தளத்தில் 12 குடியிருப்புகளும், இரண்டாவது தொகுதியில் ஒரு தளத்தில் 6 குடியிருப்புகளும் கட்டப்படும்.*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2019 ஜனவரி 7

ஒவ்வொரு கட்டட தொகுதியையும் ஸ்டில்ட் + 10 மாடிகளுடன் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ஒரு வீட்டின் பரப்பு 400 சதுர அடி. 326 சதுர அடிக்குப் பதிலாக 400 சதுர அடியாக இருக்கும் இந்தத் திட்டப் பகுதியில், 10 சதவிகித இடம் பூங்கா மற்றும் திறந்தவெளி மேம்பாட்டிற்கென்றும் 7 சதவிகித இடம், இதர பொது வசதிகளான நியாய விலைக் கடை, பாலர் பள்ளி மற்றும் கடைகளுக்கு எனவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள 360 குடியிருப்புகளில் அங்கு தற்போது வசித்துவரும் 260 குடும்பங்களுக்கு மீண்டும் குடியிருப்பை ஒதுக்கீடு செய்தபின், கூடுதலாக உள்ள 100 குடியிருப்புகளை அப்பகுதியில் குடிசைப் பகுதியில் வசிக்கும் ஏழை மக்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் மேம்பாட்டு வளர்ச்சி விதியின்படி, இத்திட்டப் பகுதியில் பன்னடுக்கு மாடி குடியிருப்புகள் அதிகபட்சம் 60 மீட்டர் உயரத்துடன் ஸ்டில்ட் + 19 மாடிகளாக கட்ட அனுமதி அளிக்கலாம். இருந்தபோதிலும், திட்டத்தின் துவக்கக் கட்டத்தில் ஒரு குடியிருப்புக்கு ரூ.13.32 இலட்சம் வீதம் 396 அடுக்குமாடிக் குடியிருப்புகள் இரண்டு தொகுதிகளாக ஸ்டில்ட் + 15 மாடிகளுடன், 400 சதுர அடி பரப்பளவில் கட்ட முடிவு செய்யப்பட்டது. பின்னர், ஒரு குடியிருப்புக்கு ரூ.13.47 இலட்சம் வீதம் 364 அடுக்குமாடிக் குடியிருப்புகள் இரண்டு தொகுதிகளாக ஸ்டில்ட் + 14 மாடிகளுடன் மறுகட்டுமானம் செய்ய முடிவு செய்யப்பட்டது. எனினும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு மற்றும் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, அதிக மாடி தளங்களைக் குறைத்து, 14–லிருந்து தற்போது 10 மாடிகளாக, 360 அடுக்குமாடிக் குடியிருப்புகள் நான்கு தொகுதிகளாகக் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி ஒரு வீட்டினுடைய கட்டுமானத் தொகை ரூ.13.70 இலட்சமாகும்.

இத்திட்டப் பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பக்கிங்காம் கால்வாய் பகுதியில் வறிய நிலையில் உள்ள சுமார் 100–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். தற்போது கட்ட திட்டமிட்டுள்ள 360 அடுக்குமாடிக் குடியிருப்புகளில் கால்வாய் கரையில் குடிசைகளில் வாழ்ந்துவரும் 100 குடும்பங்களைக் கூடுதலாகக் குடியமர்த்த ஏதுவாக அமைகிறது. மேலும், இத்திட்டப் பகுதியில், மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் கோரியபடி ஸ்டில்ட்

+ 8 மாடிகளெனத் திருத்தியமைக்கப்பட்டால் 72 குடும்பங்களைக் குடியமர்த்துவது குறைந்துவிடும். ஒரு வீட்டினுடைய கட்டுமான செலவு ரூ.13.70 இலட்சத்திலிருந்து ரூ.14.30 இலட்சமாக உயர்ந்துவிடும். இதுமட்டுமின்றி, வட சென்னை பகுதியானது மக்கட்தொகை மிகவும் நெருக்கமாக உள்ள பகுதியானதால் இப்பகுதி குடிசைவாழ் மக்களை மறுகுடியமர்வு செய்ய நிலங்கள் கிடைப்பது மிகவும் அரிதாக உள்ளது. எனவே, குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் வசம் இருக்கும் நிலப் பகுதியில் அதிகப்படியான குடியிருப்புகளைக் கட்டுவதால் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடிசைப்பகுதி வாழ் மக்களை, கூடுமானவரை அதிக எண்ணிக்கையில் மறுகுடியமர்வு செய்யலாம் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றபடி 8 அடுக்குமாடிகள் இருக்க வேண்டும் என்ற மாண்புமிகு திரு. சேகர்பாபு அவர்களின் கோரிக்கை குறித்து, வல்லுநர் குழுவுடன் ஆய்வு செய்து, தக்க முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிளைவ் பேட்டரி மற்றும்* V.R. Garden *பகுதியைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். (குறுக்கீடு) கிளைவ் பேட்டரி மற்றும்* V.R. Garden *பகுதியில் வசிக்கின்ற மக்களைப் பற்றியும், அங்கிருக்கின்ற குடிசைகளின் எண்ணிக்கை பற்றியும், பொதுவாக துறைமுகம் பகுதியில் ஒட்டுமொத்தமாக இருக்கின்ற குடிசைகளில் வாழ்கின்ற மக்களைப் பற்றியும், குறிப்பாக சாலையோரங்களிலும், கரையோரங்களிலும் வாழ்கின்ற மக்களைப் பற்றியும் மாண்புமிகு திரு. சேகர்பாபு அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே, 1,500 குடியிருப்புகளுக்கு ஆய்வு செய்யப்பட்டு மாநகராட்சி வசம் பட்டியல் தரப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பட்டியல் குடிசைமாற்று வாரியம் மூலமாகப் பெறப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு பெரும்பாக்கம் பகுதியில் இருக்கின்ற காலி மனைகளில் அவர்களின் தகுதிக்கேற்ப இடவசதி செய்துதரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*